அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அமலாக்கத்துறையை ஏவிவிட்டு தினசரி நடத்தும்

அவதூறுப் பிரச்சாரத்தை சட்டப்படி எதிர்கொள்வேன்!

அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை!

சென்னை, டிச.9–

எனது துறையின் சாதனைகளை மறைத்து "அதிமுக பா.ஜ.க" கூட்டணி அமலாக்கத்துறையை ஏவி விட்டு நடத்தும் "நாளொரு புகார்" "பொழுதொரு அவதூறுப் பிரச்சாரத்தை" சட்டப்படி எதிர்கொள்வேன் என நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என் நேரு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் கே.என்.நேரு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

ஒவ்வொரு துறையிலும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்கட்சிகளின் வரிசையில் அமலாக்கத்துறையையும் சேர்ந்து கொண்டு அதை ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஏவல் துறையாக்கி நாளொரு புகாரும், பொழுதொரு பிரச்சாரமுமாக என்னைக் குறி வைத்து தொடர்ந்து அவதூறில் ஈடுபட்டு வருவது மிகுந்த கண்டனத்திற்குரியது. கடந்த ஐந்து வருடங்களில் எனது துறையின் கீழ் 24 ஆயிரத்து 752 கிலோ மீட்டர் சாலைகள் போடப்பட்டுள்ளன. கிராமப்புற மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 1 கோடியே 22 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் 77 லட்சத்து 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு பாதுகாப்புத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

எனது துறையின் சாதனைகள் எதிரிகளுக்கு கண்ணை உறுத்துகிறது!

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் என இதுவரை 1762 பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது அதில் ஒன்று சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கோவை செம்மொழிப் பூங்கா! சென்னை என்றால் தொல்காப்பிய பூங்கா, கோவை என்றால் செம்மொழிப் பூங்கா என்பதோடு மக்கள் கண்டு களிக்க தங்களது பொழுது போக்கிற்கா ஏற்ற பூங்காக்களை திராவிட மாடல் அரசு போல் தமிழ்நாட்டில் அதிமுக அரசும் செய்யவில்லை. மற்ற மாநிலங்களில் உள்ள பா.ஜ.க. ஆளும் அரசுகளும் செய்யவில்லை. அதனால்தான் எனது துறையின் திராவிட மாடல் வளர்ச்சி எதிர்கட்சிகளின் கண்ணை உறுத்துவதை விட அமலாக்கத்துறையின் கண்களையும் உறுத்துகிறது.

பேருந்து நிலையங்கள் என்று எடுத்துக் கொண்டால் இதுவரை 158 பேருந்து நிலையங்கள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் அன்றாடப் பயணத்திற்கு மட்டுமல்ல அத்தியாவசியப் போக்குவரத்து தேவைக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் எனது துறை வரலாற்று சிறப்பு மிக்க சாதனைகளைச் செய்திருக்கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த ஐந்தாண்டுகளில் மாற்றும் அளவிற்கு வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். சென்னையில் அதிமுக ஆட்சியில் சாலைகளும் சப்வேக்களும் ஒரு மழைக்கே வெள்ளக்காடாக காட்சியளித்ததை அனைவரும் அறிவர். ஆனால் இன்று சென்னையில் உள்ள சப்வேக்களில் தண்ணீர் தேங்காத நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

செம்பரம்பாக்கம் என்றாலே அதிமுக ஆட்சிதான் நினைவுக்கு வரும்! அந்த நிலையை மாற்றி எத்தகையை மழை வெள்ளத்திலும் எத்தனை முறை செம்பரம்பாக்கத்தில் தண்ணீர் திறந்தாலும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்து இன்னலின்றி மழை வெள்ளத் துயரங்களில் இருந்து சென்னை மக்களை காப்பாற்றியிருக்கிறோம். அந்த வகையில் சென்னை மாநகராட்சியில் மட்டும் 1519 கிலோ மீட்டர் தொலைவிற்கு மழைநீர் கால்வாய் பணிகளை செய்துள்ள அரசு இந்த திராவிட மாடல் அரசு மட்டும்தான்.

திராவிட மாடல் அரசின் மீது எரிச்சல் காட்டும் பா.ஜ.க.!

இந்த சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாத - சட்டமன்றத் தேர்தலுக்கு புதிய அவதாரம் எடுத்துள்ள அதிமுக பா.ஜ.க. கூட்டணி கட்சியினரின் தூக்கத்தை இந்த அரசின் சாதனைகள் கலைத்து விட்டன. குறிப்பாக பா.ஜ.க.வினரை இந்த சாதனைகள் ரொம்பவே மிரட்டுகிறது. ஒன்றிய நிதியை முடக்குகிறோம். ஆளுநரை வைத்து முட்டுக்கட்டை போடுகிறோம். ஏஜென்ஸிகளை விட்டு பிரச்சாரம் செய்கிறோம். ஆனாலும் சாதனைகள் செய்கிறார்களே என்ற எரிச்சல்! எனவே எத தின்னால் பித்தம் தெளியும் என திண்டாடுகிறார்கள். ஆகவே அமலாக்கத் துறை போன்ற ஏஜென்ஸிகளை ஏவி விடுகிறார்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்ய வேண்டிய அரசியல் பிரச்சாரத்தை அமலாக்கத்துறையையே வைத்து செய்கிறார்கள். தன்னாட்சி மிக்க அமைப்பு என உருவாக்கப்பட்ட அமலாக்கத்துறை இன்று பா.ஜ.க.வின் துணை அமைப்பாக்கப்பட்டிருக்கிறது.

என் சகோதரர் மீது 2013ல் வாங்கிய கடனை வைத்து போடப்பட்ட வழக்கை உயர்நீதிமன்றம் "எந்த குற்றமும் நடக்கவில்லை" என ரத்து செய்து விட்டது. அதன் அடிப்படையில் அமலாக்கத்துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ஏற்கனவே உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சும் ரத்து செய்து விட்டது. ஆனாலும் அமலாக்கத் துறையை மீண்டும் மீண்டும் பிரச்சாரத்தில் ஈடுபடச் சொல்லி ஒன்றிய பா.ஜ.க. அரசு நிர்பந்திக்கிறது என்றால் அவர்களுக்குப் பயம் நானல்ல! இந்த துறை செய்துள்ள சாதனைகள்!

அரசின் சாதனைகளை மக்கள் பாராட்டுகிறார்கள்!

எனது துறைக்குள் எங்கு நுழைந்து பார்த்தாலும் எங்கும் "சாதனை சாதனை சாதனை" என்றுதான் எதிரொலிக்கும். ஆனால் அதுவே ஒன்றிய பா.ஜ.க. அரசு தூண்டிவிடும் அமலாக்கத்துறையின் கண்களுக்கு ஆதாரமற்ற புகார்களாகத் தெரிகிறது! அப்பட்டமான அரசியல் செய்யத் தூண்டிவிடப்படுகிறது.

மக்கள் போற்றும் எனது துறையின் சாதனைகளைப் பார்த்து வெதும்புவர்களுக்கு பதில் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் நான் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனது நகராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்குதல் நிர்வாகத்துறையைப் பொறுத்தமட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மக்களுக்கு வழங்குதல், மழை நீர் வடிகால் பணிகளை நிறைவேற்றுதல், தலை சிறந்த பூங்காக்களை அமைத்தல் ஆகியவையே முதன்மையான பணிகள்! முழுமையான சாதனைகள்! மற்றபடி என் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை சட்டப்படி எதிர்கொள்வேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவதூறுப் பிரச்சாரத்துக்கு நாங்கள் அஞ்சமாட்டோம்!

மக்கள் பணியாற்ற வந்துள்ள நாங்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தூண்டுதலில் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபடும் அமலாக்கத்துறைக்கோ அல்லது "அதிமுக பா.ஜ.க." கூட்டணியினர் "பொய்யையும், புரட்டையும்" மட்டுமே மூலதனமாக வைத்து ஈடுபடும் அவதூறுப் பிரச்சாரத்திற்கோ அஞ்சமாட்டோம்!

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள்:

ஒன்றிய அரசு விழிப்புணர்வுடன் எடுத்த முன்னெடுப்புகள் என்ன?

நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, டிச. 9–

காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள் பட்டியலில் பின்னுக்கு தள்ளப்பட்ட ஒன்றியம் விழிப்புணர்வாக உள்ளதா, என்ன முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டப்போகின்றன என்று எம்.பி. கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

பழைய திட்டங்களையே மீண்டும் பட்டியலிட்டு ஒன்றிய அரசு அக்கறையற்ற பதில் எனக் குற்றச்சாட்டு?

2025 ஆம் ஆண்டுக்கான Climate Change Performance Index (CCPI)யில் இந்தியா 13 இடங்கள் சரிந்து 23வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ள மோசமான நிலை குறித்து. ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

பல ஆண்டுகளுக்கு முந்தைய பழைய திட்டங்களையே மீண்டும் பட்டியலிட்டு, அமைச்சகம் பதிலளித்துள்ளது. இது ஏமாற்றம் அளிக்கிறது என்பதோடு, இந்திய மக்களின் எதிர்காலத்தின் மீது ஒன்றிய அரசு எவ்வளவு அக்கறையின்மையோடு இருக்கிறது என்பதையும் காட்டுகிறது.

தரவுகளுக்கு மதிப்பு கொடுக்காத ஆணவப் போக்கு:

உருவாக்க சரியான தரவுகளுடன் கூடிய எனது கேள்விக்கு இந்தியா எந்தவொரு வெளிநாட்டு தரவரிசையையும் உள்நாட்டு

கொள்கையை அங்கீகரிக்காது" என்று ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

காலநிலை மாற்றம் என்பது சர்வதேசப் பிரச்சனை இதில் சர்வதேச அளவிலான சுற்றுச்சூழல் அமைப்புகளின் கருத்துகளுக்கும் தரவுகளுக்கும் மதிப்பு இருக்கின்றன Germanwatch வெளியிட்ட தரவரிசையில் தகவல் பிழையிருந்தால்,

அதையே ஒன்றிய அரசு சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால், அதை 'வெளிநாட்டு தரவரிசை என ஒரே வார்த்தையில் மதிப்பைக் குறைத்து கீழே தள்ளுவது, தனது பிழைகளை மறைக்க ஒன்றிய அரசு நடத்தும் நாடகமென்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

சரி, அப்படியென்றால் இந்தியா காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகளின் அளவுகோலில் எப்படி மற்ற நாடுகளை விட சிறப்பாக செயல்படுகிறது என ஒன்றிய அரசு தரவுகளை பதிலில் சொல்லியிருக்க வேண்டும் ஆனால் அப்படி எந்த தரவையும் ஒன்றிய அரசு குறிப்பிடவில்லை. வெறுமனே "நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்" என்று சில நடவடிக்கைகளை மட்டும் குறிப்பிட்டிருக்கிறது.

எண்கள் எங்கே? எந்த அளவு நாம் மற்ற நாடுகளை விட முன்னேறியிருக்கிறோம்?

பழைய திட்டங்களையே மீண்டும் பட்டியலிட்ட ஒன்றிய அரசு:

காலநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகளில் இந்தியா சரிவை சந்தித்து வரும் நிலையில், புதிய திட்டங்கள் அல்லது இடைக்கால இலக்குகளை (Interim milestones) அறிவித்து செயல்பட வேண்டியது முக்கியம். இது குறித்த எனது கேள்விக்கு, தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் (National Green Hydrogen Mission) தேசிய சூரிய இயக்கம் (National Solar Mission), LIFE முயற்சிகள் போன்ற பழைய திட்டங்களையே ஒன்றிய அரசு மீண்டும் பட்டியலிட்டுள்ளது

இந்தப் பதில் அலட்சியமானது என்பதுடன் இத்தனை திட்டங்கள் நடைமுறையில் இருந்தும் ஏன் காலநிலை மாற்றத்தில் பின்தங்கினோம் என்ற கேள்வியை எழுப்புகிறது.

காலநிலை மாற்றம் ஒரு சர்வதேசப் பிரச்சனை என்ற நிலையில், அதில் இந்தியாவின் செயல்பாடு நமது பெருமையையும் புவி அரசியல் ஆதிக்கத்தையும் தீர்மானிக்கக்கூடியது தற்போது வரை, ஒன்றிய அரசின் செயல்பாட்டுப் பிழைகளால் நாம் பின்தள்ளப்பட்டிருக்கிறோம்.

இனியேனும் சூழலை உணர்ந்து காலநிலை மாற்றத்திற்கு எதிராக பழைய திட்டங்களை மேம்படுத்துவது. புதிய திட்டங்களை அறிவிப்பது, இடைக்கால இலக்குகள், நீண்டகால இலக்குகளை சரியாக தீர்மானித்து செயல்படுவது ஆகியவற்றை ஒன்றிய அரசு செய்ய வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனை வழங்குகிறார்!

திருவல்லிக்கேணி பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் அறிக்கை!

சென்னை, டிச. 09 -

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (09.12.20225 - செவ்வாய்கிழமை) காலை 10.00 மணியளவில், எண். 28/20, கஜடி பேகம் தெரு, இராயப்பேட்டை உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

பகுதி அவைத் தலைவர் ம. தயாநிதி தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் வீ.பி. பொன்னரசு, ஆர்.என். துரை, அ.சுபேர்கான், வி. என்.ராஜன், ப.பிரகாஷ், எ. விஜயராஜ், இ.இளம்பாரதி, கமலா செழியன், ரவி ராஜ் குமார், எம்.கே.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே கூட்டத்திற்கு வட்டச் செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:-

1) திருவண்ணாமலையில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநாடு தொடர்பாக.

2) இன்று (09.12.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 3 மணி அளவில் 115 (அ) வட்டத்திற்கும், மாலை 3.30 மணி அளவில் 116 (அ) வட்டத்திற்கும், மாலை 4.00 மணிக்கு, 116 வது வட்டத்திற்கும், மாலை 4.30 மணிக்கு, 119 வது வட்டத்திற்கும், மாலை 5.00 மணிக்கு, 119 (அ) வட்டத்திற்கும், மாலை 5.30 மணிக்கு, 120 வது வட்டத்திற்கும், மாலை 6.00 மணிக்கு, 120 (அ) வது வட்டங்களின் பாக இளைஞர் அணி நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறுகிறது.

3) கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு திருவல்லிக் கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தெரிவித்துள்ளார்.

2036–ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை

இந்தியாவில் நடத்த விருப்பம் உள்ளதா?

மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, டிச.9–

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளவிருக்கும் வீரர்கள் சிறப்பாக செயல்பட என்ன திட்டம் உள்ளது என்றும், 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதா? என்றும் மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்றத்தின் இந்த ஆண்டுக்கான குளிர்கால கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ள திமுக எம்.பி. இரா.கிரிரா

ஜன், 2028 லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2028 பிரிஸ்பேன் ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய வீரர்கள் சிறப்பாக செயல்படுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் என்ன? 2036ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதா? அது தொடர்பாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? என ஒன்றிய அரசின் விளையாட்டுத் துறை அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மன்சுக் மண்டவியா, ஒலிம்பிக் உள்ளிட்ட சர்வதேச விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் அல்லது அணிகள் ஆகியவை தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கான (NSF National Sports Federations) உதவித் திட்டம் மற்றும் ஒலிம்பிக் போட்டியும் இலக்கு திட்டம் (TOPS Target Olympic Podium Scheme) ஆகியவற்றின் மூலம் ஊக்குவிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

NFS உதவித் திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்கள் மூலம் வீரர்களுக்கான பயிற்சி, சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்பது, தேசிய சாம்பியன்ஷிப்களை நடத்துவது, இந்தியாவில் சர்வதேச போட்டிகளை நடத்துவது, வெளிநாட்டு பயிற்சியாளர்கள் அல்லது துணை ஊழியர்களை ஈடுபடுத்துவது, அறிவியல் மற்றும் மருத்துவ உதவி, வீரர்களின் பயிற்சி ஆகியவற்றுக்காக நிதி உதவி வழங்கப்படுவதாகவும் பதில் அளித்துள்ளார்.

மேலும், TOPS திட்டத்தின் கீழ், ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளுக்கு அடையாளம் காணப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி, சர்வதேச போட்டி, உபகரணங்கள், பயிற்சி முகாம் உள்ளிட்ட உதவிகளை வழங்குவதுடன், மாதாந்திர தொகையாக ரூ. 50,000 வழங்கப்படுவதாகவும், இதன்படி 233 வீரர்கள் ஆதரிக்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அமைச்சர் பதிலில் கூறப்பட்டுள்ளது. அதேபோல, 2028 லாஸ் ஏஞ்சல்ஸ், 2032 பிரிஸ்பேன் ஒலிம்பிக் போட்டிகளிலும் வீரர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு தொழில் நுட்பத்தை விளையாட்டு சுற்றுச்சூழல் அமைப்பில் ஒருங்கிணைக்கும் வகையில், தேசிய விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை டெல்லியில் நிறுவியுள்ளதாகவும் விளையாட்டுத் துறை அமைச்சர், தி.மு.க. எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு பதில் அளித்துள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் கட்டமைப்பிற்கு ஏற்ப இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான முறையான ஏலத்தை மேற்கொள்ளவது இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் பொறுப்பு என்றும், இந்த ஏலம் தற்போது ஹோஸ்ட் கமிஷனுடன் "தொடர்ச்சியான உரையாடல் (Continuous Dialogue)" கட்டத்தில் உள்ளது என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பிரபு கஜேந்திரன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, பரிதி இளம் சுருதி, பத்மபிரியா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் வரவேற்பில் வேம்பாக்கத்தில் நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் டிசம்பர் 14ஆம் தேதி அன்று திருவண்ணாமலையில் இளைஞர் அணி சார்பில் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்பது குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், சுரேஷ்செல்வராஜ், ஆ.ராஜா, மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல், ரவி, கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், பா.செ.குணசேகரன், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம்விஸ்வநாதன் உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.